## ஜனவரி – 02 – புதன்

**புனிதர்கள் பெரிய பசிலியர் - நசியான்ஸ் கிரகோரி**

**“நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார்’’ யோவான் 1:28**

### முதல் வாசகம் : 1 யோவான் 2 : 22 - 28

அன்பிற்குரியவர்களே! இயேசு ”மெசியா” அல்ல என்று மறுப்போரைத் தவிர வேறு யார் பொய்யர்? தந்தையையும் மகனையும் மறுப்போர்தாம் எதிர்க் கிறிஸ்துகள். மகனை மறுதலிப்போர் தந்தையை ஏற்றுக்கொள்வதில்லை மகனை ஏற்று அறிக்கையிடுவோர் தந்தையையும் ஏற்றுக்கொள்கின்றனர். தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத் திருக்கட்டும் தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருந்தால் நீங்கள் மகனுடனும் தந்தையுடனும் இணைந்திருப்பீர்கள். அவரே நமக்கு வாக்குறுதி அளித்துள்ளார். அவ்வாக்குறுதி நிலைவாழ்வு பற்றியதாகும். உங்களை ஏமாற்றுகிறவர்களை மனத்தில் கொண்டு இவற்றை உங்களுக்கு எழுதியுள்ளேன். நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருள் பொழிவு உங்களுள் நிலைத்திருக்கிறது. அதனால் உங்களுக்கு எவரும் கற்பிக்க வேண்டிய தேவையில்லை. மாறாக, நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருள்பொழிவால் அனைத்தையும் கற்றுக்கொள்கிறீர்கள். அவ்வருள்பொழிவு உண்மையானது பொய்யானது அல்ல. நீங்கள் கற்றுக்கொண்டதற்கேற்ப அவரோடு இணைந்து வாழுங்கள். ஆகவே, பிள்ளைகளே, அவர் தோன்றும்போது நாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கவும் அவருடைய வருகையின்போது வெட்கி விலகாதிருக்கவும் அவரோடு இணைந்து வாழுங்கள்.

**பதில்பாடல் :** உலகெங்குமுள்ள அனைவரும் நம் கடவுள்
அருளிய விடுதலையைக் கண்டனர்.

### நற்செய்தி : யோவான் 1 : 19 – 28

அக்காலத்தில் எருசலேமிலுள்ள யூதர்கள் குருக்களையும் லேவியர்களையும் யோவானிடம் அனுப்பி, ”நீர் யார்?” என்று கேட்டபோது அவர், ”நான் மெசியா அல்ல” என்று அறிவித்தார். இதை அவர் வெளிப்படையாகக் கூறி, மறுக்காமல் ஒப்புக்கொண்டார். அப்போது, ”அப்படியானால் நீர் யார்? நீர் எலியாவா?” என்று அவர்கள் கேட்க, அவர், ”நானல்ல” என்றார் ”நீர் தாம் வர வேண்டிய இறைவாக்கினரா?” என்று கேட்டபோதும், அவர், ”இல்லை” என்று மறுமொழி கூறினார். அவர்கள் அவரிடம், ”நீர் யார்? எங்களை அனுப்பியவர்களிடம் நாங்கள் மறுமொழி சொல்லியாக வேண்டும் எனவே உம்மைப்பற்றி என்ன சொல்கிறீர்?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், ”“ஆண்டவருக்காக வழியைச் செம்மையாக்குங்கள் எனப் பாலைநிலத்தில் குரல் ஒன்று கேட்கிறது“என்று இறைவாக்கினர் எசாயா உரைத்தது என்னைப்பற்றியே” என்றார். பரிசேயரால் அனுப்பப்பட்ட அவர்கள் அவரிடம், ”நீர் மெசியாவோ எலியாவோ வர வேண்டிய இறைவாக்கினரே அல்லவென்றால் ஏன் திருமுழுக்குக் கொடுக்கிறீர்?” என்று கேட்டார்கள். யோவான் அவர்களிடம், ”நான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் எனக்குப்பின் வருபவர் அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை” என்றார்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைகள் இறைவனைக் கண்டு அவரை விசுவசித்து அவருக்கு சான்று பகிர எம்மை அழைக்கின்றன. திருமுழுக்கின் மூலம் நாம் பெற்றுக்கொண்ட அருட்பொழிவின் மூலம் நாம் இறைமகன் இயேசுவோடும், தந்தையோடும் இணைந்திருக்கும் கருணையை நாம் பெற்றுள்ளோம் என்பதை முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் நான் மெசியா அல்ல நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார் (யோவான்.1:28) அவர்தான் மெசியா என்று சுட்டிக் காட்டகின்றார். தான் ஆண்டவரின் முன்னோடி என்பதை அவர் ஒரு போதும் மறக்கவில்லை. எனவே தான் அருள் நெஞ்சத்தோடு சொல்ல வேண்டியதைச் சொன்னார். நாமும் இறைமகன் இயேசுவோடு இணைந்து வாழ்வது என்பது அவரை நாம் சிந்தனை மையத்தில் இருத்தி வைப்பதே. நம் ஒவ்வொருவரினதும் சிந்னையும் அவரது உடனிருப்பிலிருந்து சிந்த வேண்டும். அப்படியெனில் உண்மையை உணர்வோம். ஆண்டவரோடு இணைந்து வாருங்கள் வெட்கித் தலைகுனிய மாட்டீர்கள் என்னும் வார்த்தைக்கு செவிமடுப்போம், இறைவனோடு இணைந்து இனிதாய் வாழ்வோம்.